# 2 ஆறு

## தேசிக விநாயகம்பிள்ளை

சிவதானுப்பிள்ளை ஆதிலெட்சுமி ஆகியோரின் மூன்றாவது மகனே தேசிக விநாயகம்பிள்ளையாவார். இவர் 1876 ஆம் ஆண்டு ஆடித் திங்கள் 27 ஆம் நாள் பிறந்தார். 78 ஆம் வயதில் இறைபதம் அடைந்தார். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேரூரில் வாழ்ந்தார். மலரும் மாலையும், உமர் கய்யாம் பாடல்கள், குழந்தைச் செல்வம், கவிமணியின் உரை மணிகள் முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
        காடும் செடியும் கடந்து வந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி எங்கும் நான்
        இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.



கட்டும் அணையேறிச் சாடிவந்தேன் - அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்;
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன் - மடைச்
சீப்புகள் மோதித் திறந்து வந்தேன்.

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன் - அதில்
கண்குளிரப்பயிர் கண்டுவந்தேன்;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன் - அங்கென்
ஆசை தீரவிளை யாடிவந்தேன்.

ஏறாத மேடுகள் ஏறி வந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

ஆயிரம் காலால் நடந்துவந்தேன் - நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன்
நேயமுறப் புன்செய்க் காட்டிலும் - அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன்.

பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன் - சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்;
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரில் - குழாய்
நீராகவும் சென்று பாய்ந்துவந்தேன்.

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்
வாச மலர்களும் அள்ளி வந்தேன்;
தீங்கரும் பாயிரம் தள்ளிவந்தேன் - மிகத்
தேனும் தினையுமே சேர்த்து வந்தேன்.

அல்லும் பகலும் அலைந்து வந்தேன் - எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்;
நில்லும் எனக்கினி நேரமில்லை - இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும் அம்மா!

**கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.**
**'மலரும் மாலையும்'.**

### அரும்பதங்கள்

| | |
|---|---|
| அணை | - அணைக்கட்டு |
| சாடிவரல் | - மோதி வரல் |
| கண்ணறை | - சிறு அறை |
| பொழில் | - சோலை |
| நிலத்தழல் | - நிலத்தின் வெப்பம் |
| நன்செய் | - நெல்லுங் கரும்பும் விளையும் வயல் |
| புன்செய் | - கொல்லை நிலம் (தரிசு) |
| உலர்ந்த | - காய்ந்த |
| தினை | - ஒரு வகையான தானியம் |
| ஆழி | - கடல் |

## கிரகித்தல் பயிற்சி

1. எங்கே தவழ்ந்து வந்ததாக ஆறு கூறுகின்றது?
2. ஆறு எங்கே விளையாடியது?
3. ஆறு சென்று வந்த மூன்று இடங்களைக் குறிப்பிடுக.
4. அல்லும் பகலும் என்பதன் கருத்து யாது?
5. இன்னும் நீண்ட வழி போக வேண்டும் அம்மா என்பதன் கருத்து யாது?
6. இப்பாடலினூடாக நீர் கற்றுக்கொள்ளும் படிப்பினை யாது?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து பாடலை இரசனையுடன் பாடுவதற்கு முயற்சி செய்க.
2. பாடலை அபிநயத்துடன் பாடுக.
3. பாடலை மனனம் செய்க.
4. இதுபோன்ற பாடல்களை எழுத முயற்சி செய்க.

# நிறுத்தற்குறிகள்

ஒரு விடயத்தை சரியாக வாசித்து, அதற்குரிய பொருளைப் புரிந்துகொள்வதற்கு நிறுத்தற்குறிகள் பயன்படுகின்றன. இக்குறியீடுகளை முறையாகவும் சரியாகவும் பயன்படுத்துவது அவசியமாகும்.

## 01. காற்புள்ளி ( , )

அ) ஒரு வாக்கியத்தில் தொடராக வரும் சொற்களைப் பிரித்துக் காட்டுவதற்கு இக்குறியீடு பயன்படுத்தப்படுகிறது.

**உதாரணம்** - ஆறானது மலைநாடு, காடு, சமவெளி, அணைகள் என்பவற்றைக் கடந்து வந்தது.

ஆ) வாக்கியத்தின் பொருளை தெளிவுபடுத்திக்காட்டுவதற்கு காற்புள்ளி பயன்படுகிறது.

**உதாரணம்** - புத்த பெருமான் மன்னனை நோக்கி, உயிரைக் கொல்வது தருமம் ஆகாது என்றார்.

இ) முகவரியை எழுதும்பொழுது ஒவ்வொரு பகுதியையும் பிரித்துக்காட்டுவதற்கு காற்புள்ளி இடப்படும்.

**உதாரணம்** - இல 197/21,
பேராதனை வீதி,
கண்டி.

ஈ) ஒருவரை அல்லது ஒன்றை விளித்துக் கூறுமிடத்திலும் காற்புள்ளி இடப்படும் (பெரும்பாலும் கடிதத்தில்).

**உதாரணம்** - அன்புள்ள மதிக்கு,
ஐயா, / அம்மணி,

## 02. முக்காற்புள்ளி ( : )

ஒரு விடயத்தை விளக்குவதற்குமுன் இடப்படுவதே இக்குறியீடாகும்.

**உதாரணம்** - மக்களின் வாழ்க்கை முறை: இக்கால மக்கள் மனம்போன வழியே தமது வாழ்க்கையை அமைத்துக்கொள்கின்றனர்.

## 03. முற்றுப்புள்ளி ( . )

ஒரு வாக்கியத்தின் பொருள் முடிவு பெற்றதை உணர்த்துவதற்காக இடப்படுவது இக்குறியீடாகும்.

**உதாரணம்** - நான் காலால் நடந்து வந்தேன்.

## 04. வினாக்குறி ( ? )

விடையினை எதிர்பார்த்து வினவப்படும் வாக்கியத்தின் இறுதியில் இடப்படும் குறியீடாகும்.

**உதாரணம்** - ஆழி இறைவன் எனக் குறிப்பிடப்படுவது எது?

காயும் நிலத்தழல் ஆற்றி வந்தேன் என்பதன் கருத்து யாது?

## 05. வியப்புக்குறி ( ! )

உணர்ச்சிகளை அல்லது வியப்புப் பொருளை உணர்த்தும் சொல்லை அடுத்து இடம்பெறும் குறி வியப்புக்குறியாகும்.

**உதாரணம்** - அடடா! எத்தனை புதுமை.